# வஞ்ச விழா

## (தீபாவளி)

### காட்சி—ஒன்று

**இடம் :** *கங்கைக் கரை*

**உறுப்பினர் :** *மகரிஷிகள், இந்திரன்*

**மகரிகள் சொல்லுகிறார்கள்:**

*தென்பாங்கு வளம் மிக்கது. தமிழர்கள், நெய்யொழுகும் செந்நெற் சோறு உண்கிறார்கள் வேண்டுமட்டும்.*

*பெரும் பொழுதில் ஒரு பருவமாயினும் சிறு பொழுதில் ஒரே நாழிகையாயினும் 'இல்லை' என்னும் துன்பம் எத்துறையிலும் அவர்கட்கில்லை.*

*முத்துக் குவிக்கும் அலைகடல் அங்கே! தெங்கும், கரும்பும்; தேனும் அமுதத்தினும் ஆயிரம் பாங்கு இனிமை அங்கே.*

*தமிழர் வாழ்வைப் பறிக்க இந்திரா நீ துணை செய்.*

**இந்திரன் சொல்லுகிறான் :** *விண்ணப்பம் நன்று! மகரிஷிகள் அமைக! மூச்சுடையேன் தமிழர் வாழ்வைப் பறிப்பேன்; தோளுடையேன்; ஆரியரைக் காப்பேன். இன்று தமிழர் நிலை—இன்று தமிழர் தலைமை எவ்வாறு?*

**மகரிஷிகள் சொல்லுகிறார்கள்:** *அவர்களின் ஒழுக்கம் நமக்குத் துணை செய்கிறது அவர்களின் தலைவராயினும்.*

தந்திரம் அயோக்கியர் செயல்—கேடு விளங்கும் பெண்களும் மன்னிக்கப்படுதல் வேண்டும். இவைகள் அவர்களின் கொள்கை!

இந்திரன் சொல்லுகிறான் : விடியில் அழிப்பேன். என் சிரிப்பு நாளைய வெற்றியை உறுதியாக்குவது—வாழிய ஆரியர்.

மகரிஷிகள் சொல்லுகிறார்கள் : வடித்தெடுத்த சோமரசம் இந்திரா உனக்கு மிகுதியாய்க் கிடைக்க! அமுதில்' இணைந்த உன் வாழ்வு இமயத்திலும் பெரிதாகுக.

## காட்சி—இரண்டு

இடம் : தென்பாங்கில் ஓர்பால் பொதுவில்

உறுப்பினர் : தமிழ்ப் பெரியார் பலர், மன்னன்.

தமிழ்ப்பெரியார் சாற்றுகின்றார்கள் : தென்றலின் குளிரும், திங்களின் குளிரும் வாழிய!

செந்தேனும் செங்கரும்பும் செந்தமிழும் இனிமை செய்க.

அவை வாழிய. தமிழர் தோள் வெல்க.

வானிடைக் கதிர் வரவு போல் அரசே, பொது ஆலிடை வருக; நின் செங்கோல் வாழ்க.

அரசன் சொல்லுகிறான்: தமிழர் ஒழுக்கம் வாழ்க; அதை உலகு மேற்கொண்டு உய்க.

அறிஞர் நீவிர் வாழ்க!

பெரியீர் புதுமை உண்டோ?

தமிழ்ப்பெரியார் சாற்றுகின்றார்கள்: அணைகடப்பது நீரின் இயற்கை; அன்பு தவிர்வது ஆரியர் இயற்கை.

அரசன் அறைகின்றான்: தீயது கேட்கின்றேன், வாழிய தமிழர் தோள்கள்.

நீவிர் விரும்பாமை ஆரியர் இயற்றுவாராயின் நான் வாழ்தல் வீண்!

தமிழ்ப்பெரியார் சாற்றுகின்றார்கள் : தமிழரின் வாழ்வு பறிப்பது ஆரியர் நோக்கம். ஒன்று, இரண்டு, மூன்று முறை கேட்கலானேம் அவர்களின் கொடுஞ் செயல்பற்றி!

அரசன் அறைகின்றான் : ஆரியர் அன்பு எய்துக. அவர்கள் ஒழுக்கத்தை மேற்கொள்க—என் ஆணை இது.

தமிழ்ப்பெரியார் சாற்றுகின்றார்கள் : அரசே, ஆணை பன்முறை பயனற்றுப் போயிற்று.

அரசன் அறைகின்றான் : தமிழர் படை எழுக, மேற்குத் தொடர் மலைபோல்!

எழுக! ஆரியர் மேல் செல்க. பெண்களை, முதியாரை, நோயினரைக் கொல்லாது விடுக. வேல் மறவர் வேலின் நுனி, ஆரியரின் நடுமார்பில் பாய்ச்சாதிருக்க, அவர்கள் மாந்தராதலின்.

தமிழ்ப்பெரியார் சாற்றுகின்றார்கள் : அரசன் அறத்தோள் வாழ்க. காவிரியாற்றின் கருமணலின் தொகையள வாண்டுகள் அரசு, முறை செய்து வாழ்க!

## காட்சி—மூன்று

இடம் : கங்கைக் கரை

உறுப்பினர் : மகரிஷிகள், கரியன்.

மகரிஷிகள் சொல்லுகிறார்கள்: இந்திரன், செந்தமிழரை வெல்லும் திறமிலான் யாம் அறிவோம்.

தந்திரத்தால் வெல்வான் என நினைத்ததும் தப்பு; அவன் தோற்றோடினான் தமிழர்க்கு.

நீ கரியன் தமிழன் போன்றாய்!

நீ தந்திரன் இந்திரன் போன்றானில்லை; வென்றுவருக தமிழரை! நீ வாழ்க!

கரியன் சொல்லுகின்றுன் : பல்லாயிரம் பெண்கள் பச்சை மயில்கள் போல் எழுக! படைக்கலம் தூக்குக! பாவையரைத் தமிழர் கொல்லாராதலின்.

என் ஆருயிர்க் காதலி அமைக தேர் நடத்துபவளாக! அவள் தமிழச்சி எனப்படுவதால்.

தேரேறிச் செல்வேன் போரேறி வெற்றிமாலை பூண்பேன்.

எதிர்பார்த்திருக்க!

## காட்சி—நான்கு

இடம் : கங்கைக் கரை.

உறுப்பினர் : மகரிஷிகள், கரியன்,

மகரிஷிகள் சொல்லுகிறுர்கள் : வென்றனை கரிய. உன் தந்திரம் வென்றது. வீழ்ச்சி தமிழர்க்கு? மீட்சி ஆரியர்க்கு! இமய மலை சாயினும்: மறத் தமிழர் சாயார் என்றது எங்கள் உள்ளம். அது 'தோற்றது, கரிய, தமிழரைத் தமிழ் மன்னனை உன் தந்திரம்—சூழ்ச்சி வெல்லும் என்றது எங்கள் உள்ளம். அது வென்றது—நிலை வாழ்க. தமிழ் மன்னன் அழிந்த நாள் நம் விழா நாள், தமிழர்க்குத் துன்ப நாளாயினும்.

தமிழர் வாழ்வை—தமிழ் நாட்டின் ஒரு பகுதியைப் பறித்த நாள்—நம் விழா நாளாகுக. தமிழர்க்கு அது இழவு நாளாயினும்.

முற்றும்